

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காயல்பட்டினம் நகராட்சி பகுதியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, நகராட்சி மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் பராமரிப்பு நிதியின் கீழ் ரூபாய் 5 கோடியே 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட இருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு படுகை கட்டுமானப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், காயல்பட்டினம் நகர்மன்றத் தலைவர் முத்து முஹம்மது, திருச்செந்தூர் ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஈச்சம்பள்ளி, பொன்னாம்பாளையம் சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஊராட்சிகள் உதவி இயக்குனர் உமா சங்கர், மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன், கதிர்வேல், விஜயகுமார், யுவரேகா தனசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம் – வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு பகுதிகளில்

# ரூ.11.88 கோடி மதிப்பில் திட்டப் பணிகள் - முடிவுற்ற திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டி – திறந்து வைத்தார்!

பெரம்பலூர்,ஜூன்.21-

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருமாந்துறை, கீழப்புலியூர், சிறுகுடல், கே.புதூர், முருக்கன்குடி, பெருமத்தூர், பெ.குடிகாடு, ந.கிளியூர், நன்னை, பென்னகோணம், கழனிவாசல், ஒகளூர், புதுப்பேட்டை, அத்தியூர் ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்சா.சி.சிவசங்கர் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தலைமையில், ரூ.11.88 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் கிராமப்புற வளர்ச்சிக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை திட்டங்களாக வழங்கி வருகின்றார்.

இன்று வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் திருமாந்துறை, அத்தியூர் மற்றும் நன்னை ஊராட்சிகளில் தலா ரூ.31.40 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிடங்கள் கட்டும் பணி, ரூ.13.28 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டும் பணி, ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் பணி, அத்தியூர் ஊராட்சிக்குட்பட்ட புதுப்பேட்டையில் ரூ.9.85 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் அமைக்கும் பணி, ரூ.31.40 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டும் பணி,

ஊராட்சி பொது நிதியின் கீழ் திருமாந்துறை ஊராட்சி ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ.2.80 லட்சம் மதிப்பீட்டில் பைப் லைன் மற்றும் 47 எண்ணிக்கையில் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணி, ஆதிதிராவிடர் புதுத் தெருவில் ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் பைப் லைன் மற்றும் 50 எண்ணிக்கையில் வீட்டுக் குழாய் இணைப்பு வழங்கும் பணி, ரூ.6.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய கிணறு முதல் ஓ.எச்.டி டேங்க் வரை மெயின் பைப் லைன், மோட்டார் மற்றும் வயரிங் அமைக்கும் பணி, ரூ.2.98 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஓ.எச்.டி க்கு பைப் லைன் அமைக்கும் பணி, ரூ.4 லட்சம் மதிப்பீட்டில் மெயின் பைப் லைன், மோட்டார் மற்றும் வயரிங் பணிகள், ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் மெயின் பைப் லைன் அமைக்கும் பணி, ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் கே. புதூர் கிராமத்தில் கே. புதூர் சாலை முதல் நமையூர் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி, ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் பெருமத்தூர் ஊராட்சிக் குட்பட்ட எறையூர் நன்னை சாலை முதல் நல்லூர் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணி,

கனிமங்கள் மற்றும் சுரங்க நிதியின் கீழ் சிறுகுடல், பெருமத்தூர் குடிக்காடு, பென்னக்கோணம், கழனிவாசல் மற்றும் ஒகளூர், அத்தியூர் ஆதிதிராவிடர் பகுதி ஆகிய பகுதிகளில் தலா ரூ.9.15 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் நன்னை ஊராட்சி கிளியூர் கிராமத்தில் ரூ.1.60 லட்சம் மதிப்பீட்டில் ஆதிராவிடர் குடியிருப்பு பகுதியில் பைப் லைன் அமைத்து 30 எண்ணிக்கையில் வீட்டுக் குழாய் இணைப்பு வழங்கும் பணி, நன்னை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ரூ.2.15 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணி, ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் நன்னையில் தார் சாலை அமைக்கும் பணி, ஒகளூர் ஊராட்சி காந்தி நகரில் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் பைப் லைன் மற்றும் 50 எண்ணிக்கையில் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும், 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் திருமாந்துறை கிராமத்தில் ரூ.7.85 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய சுகாதார வளாகம் அமைக்கும் பணி, ரூ5.92 லட்சம் மதிப்பீட்டில் சிறுகுடல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சிறிய சமுதாய சுகாதார வளாகம் அமைக்கும் பணி,

பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழப்புலியூர் கிராமத்தில் ரூ.165.14 லட்சம் மதிப்பீட்டில் தேவையூர் செந்துறை சாலையை பலப்படுத்தும் பணி, சிறுபாசன ஏரிகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெருமத்தூர் கிராமத்தில் ரூ.17.77 லட்சம் மதிப்பீட்டில் பெரிய ஏரியை புனரமைக்கும் பணி, நன்னை கிராமத்தில் ரூ.46.51 லட்சம் மதிப்பீட்டில் தக்கன் ஏரியை புனரமைக்கும் பணி,

அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழப்புலியூர் ஆதிதிராவிடர் மயானத்திற்கு ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் சிறுகூடல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கணினி வகுப்பறை கட்டும் பணி, முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் முருக்கன்குடி முதல் காருகுடி வரை ரூ.106.57 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி, மூலதன முதலீட்டு சிறப்பு திட்டத்தின் கீழ் பென்னகோணம் ஊராட்சியில் ரூ.272.50 லட்சம் மதிப்பீட்டில் பென்னகோணம் பெருமத்தூர் சாலையை பலப்படுத்தும் பணி என மொத்தம் ரூ.11.05 கோடி மதிப்பீட்டில் 34 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த காலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நபார்டு திட்டத்தின் கீழ் கிளியூர் கிராமத்தில் ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நன்னை கிராமத்தில் ரூ.29.97 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 60,000 லி கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மாவட்ட ஊராட்சி பொது நிதியின் கீழ் பெருமத்தூர் கிராமத்தில் ரூ.7.10 லட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்ட காத்திருப்போர் கூடம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பெருமத்தூர் கிராமத்தில் ரூ.20.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பால்பண்ணை கட்டிடம், அயோத்திதாசர் பண்டித குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நன்னை ஊராட்சியில் ரூ.7.54 லட்சம் மதிப்பீட்டில் வேப்பூர் சாலை முதல் மாரியம்மன் கோவில் வரை அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை என மொத்தம் ரூ.83.13 லட்சம் மதிப்பீட்டில் 5 புதிய திட்டப்பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று கடந்த நான்காண்டுகளில் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில், எண்ணற்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் தி.மதியழகன், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், சேகர், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம், கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், கங்கைகொண்டான் பேரூர் கழக நிர்வாகிகளுக்கு,'ஓரணியில் தமிழ்நாடு ,உறுப்பினர் சேர்க்கும் படிவத்தினை, ஒன்றிய கழக செயலாளர் கே.ஆர் .ராயர், தொகுதி பார்வையாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.விக்ரமன் வழங்கினர். பேரூராட்சி துணைத் தலைவர் ஏ.பிலிக்ஸ், பேரூர் கழக தலைவர் மனோகர், மாவட்ட பிரதிநிதி எஸ். செந்தில்குமார், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் சுரேஷ்,கார்த்திக், வீரராகவன், வேல்முருகன், முன்னாள் பொருளாளர் மதிமுருகன் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள் சார்பான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.சி.ஆர்.எம். தினேஷ்ராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், கட்டமைப்புகளின் நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | ஊத்தங்கரை மத்திய ஒன்றியம் | பாவக்கல் | பசும்பொன் ரவிச்சந்திரன் சே.ஆனந்த சைனி |
| 2 | | நாகரசம்பட்டி பேரூர் ஒன்றியம் | என்.தட்டக்கல் | சேலம் சுஜாதா எஸ்.பவித்ரா |
| 3 | 22.06.2025 | போச்சம்பள்ளி ஒன்றியம் | மகாதேவன கொள்ளஅள்ளி, அனக்கொடி | அப்துல் ரகுமான் பாரி எஸ்.பவித்ரா |
| 4 | | கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் | பையனப்பள்ளி | கனல் சுப்பிரமணி வே.ஆனந்த சைனி |
| 5 | 23.06.2025 | மத்தூர் தெற்கு ஒன்றியம் | கெரிகப்பள்ளி | ஜான் சுந்தர்ராஜ் வே.சீனிவாசன் |
| 6 | | பர்கூர் தெற்கு ஒன்றியம் | கொத்தபள்ளி, ஐங்குந்தம் | லயோலா ராஜசேகர் கு.முரளிகிருஷ்ணன் |
| 7 | | கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் | பாஞ்சாலியூர், வெங்கடாபுரம் | செந்தாமரைக்கண்ணன் எஸ்.பவித்ரா |
| 8 | 24.06.2025 | மத்தூர் வடக்கு ஒன்றியம் | மலையாண்டஹள்ளி | லயோலா ராஜசேகர் ர.ராஜேஷ் |
| 9 | | காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் | நெடுங்கல் | கனல் சுப்பிரமணி வே.சீனிவாசன் |
| 10 | | கிருஷ்ணகிரி மேற்கு நகரம் | சென்ட்ரல் தியேட்டர், லண்டன்பேட்டை. | அப்துல் ரகுமான் பாரி சே.ஆனந்த சைனி |
| 11 | 25.06.2025 | பர்கூர் பேரூர் | எம்.ஜி.ஆர். நகர் | பையூர் இளையராஜா சி.பவித்ரா |
| 12 | | காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் | வெங்கடாபுரம், பாஞ்சாலியூர். | தருமபுரி அதியமான் கு.முரளிகிருஷ்ணன் |
| 13 | 26.06.2025 | காவேரிப்பட்டணம் பேரூர் | பேருந்து நிலையம், காவேரிப்பட்டணம் | லயோலா ராஜசேகர் ர.ராஜேஷ் |
| 14 | | கிருஷ்ணகிரி கிழக்கு நகரம் | பாரதிதாசன் தெரு, 29.வது வார்டு, கிருஷ்ணகிரி. | கந்திலி கரிகாலன் எஸ்.பவித்ரா |

கிருஷ்ணகிரி

நாள் : 19-06-2025

கலைஞர் 100 1924 - 2023







கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை ஒன்றியம் அரிசிபாளையம் – போர்ட் நகரில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2025–26 கீழ் ரூபாய் 17,20,000 மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி மையம் கட்டடம் கட்டும் பணியினை கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் மதுக்கரை ஒன்றிய கழக செயலாளர் விஜயசேகரன், அரிசிபாளையம் முன்னாள் தலைவர் கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகரன், ஒத்தக்கால் மண்டபம் பேரூர் கழக செயலாளர் கார்த்திஉள்பட பலர் கலந்து கொண்டனர்.